ஆட்டிஸம் பாதிப்புடையவர்கள் ஒரே மாதிரியான உணவையே சாப்பிட விரும்புவார்கள். மேலும் புதிய உணவு வகைகளை விரும்ப மாட்டார்கள். இதனை நடத்தை சீரமைப்புப் பயிற்சியின் மூலம் உணவு சாப்பிடும் முறையை சரி செய்யலாம்.

ஆட்டிஸம் பாதிப்புடைய பல்வேறு குழந்தைகள் மூளையிலுள்ள நரம்பு வேதியியல் மற்றும் உயிரியல் காரணங்களால் தூக்கம் குறைபாடு காணப்படுகிறது. முறையாக திட்டமிட்டு கையாளுதல் மூலம் படிப்படியாக இதனை குறைக்கலாம்.

ஆட்டிஸம் பாதிப்புடைய பல்வேறு குழந்தைகள் கழிப்பிட பயிற்சி கற்று கொள்வதற்கு சிரமம் காணப்படுகிறது இதற்கு முறையான பயிற்சி அளிப்பதினாலும், ஊக்கப்படுத்தும் பொருட்களை வழங்குதல் மூலமாகவும் முன்னேற்றலாம்.

ஆட்டிஸம் பாதிப்புடைய குழந்தைகள் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள். ஒவ்வொரு குழந்தையும் அவரவர் செயலிலும், சூழ்நிலையை புரிந்து கொள்வதிலும் சிரமம் கொண்டு காணப்படுவர். பெரும்பான்மையானவர்கள் தகவல் பரிமாற்றம் குறைவாகவும், செயலின்றியும் காணப்படுவார்கள். ஒரே குழந்தைக்கு எந்த ஒரு குறிப்பிட்ட பயிற்சியும் சிறப்பானதாக இருக்க முடியாது. மேலும் பல்வேறு வகைகளில் பயிற்சி அளித்தாலும் ஒரே வகையான முன்னேற்றத்தையே அளிக்கும். ஆட்டிஸம் உள்ள குழந்தைகளுக்கு அளிக்கக்கூடிய பயிற்சிகள், சிகிச்சை முறைகள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக தெரிந்தாலும், அவை அனைத்தும் வெவ்வேறானவை என்பதை பெற்றோர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள், பயிற்சி நிபுணர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகும்.








மேலும் தகவல்களுக்கு :

www.autism.india.org
www.autism.org
www.autismindia.com
www.autism-pdd.net
www.autism-society.org
www.autism-speaks.org
www.autism.com
www.nas.org.uk
www.autism-resources.com



NIEPMD

ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல், சென்னை-603 112. தமிழ்நாடு.





# ஆட்டிஸம்

AUTISM



இந்த பிரசுரத்தை பதிவிறக்கம் செய்ய மேலே உள்ள QR குறியீட்டை க்ளிக் செய்யவும்

NIEPMD

ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல்,
சென்னை-603 112. தமிழ்நாடு.

தொலைபேசி:044-27472046, 27472113 தொலைநகல்:044-27472389
மின் அஞ்சல்: niepmd@gmail.com,
மின் அலை: www.niepmd.tn.nic.in

வேலை நேரம்

திங்கள் - வெள்ளி காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணிவரை

விடுமுறை

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்

மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சிறந்த இணையதளம் (வெப்சைட்) உருவாக்கியதற்கான தேசிய விருது (2011) மற்றும் மாற்றுத் திறனாளிகள் எந்த தடையும் இன்றி செல்லும் வகையில் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தியதற்காக தேசிய விருது (2012) பெற்ற நிறுவனம்.

## ஆட்டிஸம் என்பதின் விளக்கம் என்ன?

ஆட்டிஸம் என்பது வளர் நிலை பாதிப்பு எனலாம். இதனால் குழந்தையின் முதன்மைச் செயல்களான பேச்சு – மொழி தகவல் பரிமாற்றம், சூழ்நிலைத் திறன் ஆகியவை பாதிக்கப்படுகிறது. இவை குழந்தையின் திரும்பத் திரும்ப செய்யும் நடத்தைகளாலும் மற்றும் வேண்டாத செயல்களாலும் தெரிந்துகொள்ளலாம்.

## ஆட்டிஸம் பாதிக்கப்பட்டோரின் கணக்கீடு

அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிறுவனத்தின் கணக்கீட்டின்படி 116 குழந்தைகளில் ஒரு குழந்தை என்ற விகிதத்தில் ஆட்டிஸம் பாதிப்புடைய குழந்தைகள் பிறக்கின்றன.

ஆட்டிஸம் 4 முதல் 5 பங்கு ஆண் குழந்தைகளையே அதிகம் பாதிக்கிறது. மேலும் ஆட்டிஸம் பாதிப்புடையோர் மன வளர்ச்சி குன்றியோராகவும் இருப்பதாக மற்றொரு ஆய்வு தெரிவிக்கிறது.

இந்திய கணக்கெடுப்பின்படி 2 மில்லியன் மக்கள் தொகையும் அல்லது 10,000த்தில் 20 என்ற விகிதத்தில் ஆட்டிஸம் பாதிப்பு உடையவர்களாக உள்ளனர்.

## ஆட்டிஸம் பாதிப்பிற்கான காரணங்கள் :

ஆட்டிஸம் பாதிப்பிற்கு என்று தனிப்பட்ட காரணங்கள் எதுவுமில்லை என்பதும், மேலும் சில வரையறையின் மூலமாகவும், ஆராய்ச்சியின் அடிப்படையிலும் மற்றும் அதிக எண்ணிக்கையில் உள்ள ஆட்டிஸம் குழந்தைகளை ஒப்பிடுவதன்மூலம் காரணங்கள் கண்டறியப்படுகிறது.

ஆட்டிஸம் என்பதற்கு வலுவான ஆதாரமாக மரபியல் ரீதியான காரணங்களாக இருக்கலாம் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ள கூடியதாகும். ஆனால் ஆட்டிஸம் பாதிப்புடைய அனைத்து குழந்தைகளுக்கும் மரபியல் காரணங்கள் இக்குறைபாட்டிற்கு காரணங்களாக இருக்க முடியாது. மேலும் கர்ப காலத்தின்போதும் மற்றும் குழந்தை பிறக்கும்போதும் ஏற்படக்கூடிய அபாய நிலைகளும் காரணங்களாக இருக்கலாம்.



சில ஆராய்ச்சியின் மூலம், சூழ்நிலை காரணிகளும் ஆட்டிஸம் பாதிப்பிற்கு காரணங்களாக இருக்கலாம் என்று கூறுகின்றன.

- திமேரிசோல் (பாதரசக் கலவை) குழந்தைகளின் தடுப்பூசி மருந்தில் இருப்பது.
- தாய் அதிகப்படியான நோய் எதிர்ப்பு மாத்திரைகள் சாப்பிடுதல்.
- கர்பத்தின்போது பாதரசம் கலந்த பொருட்கள் எடுத்துக்கொள்ளுதல் (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ)
- தாயின் உணவில் சத்து பற்றாக்குறை ஏற்படுதல்.
- கர்பத்தின்போது பூச்சிக்கொல்லிகள் மற்றும் சூழ்நிலையில் உள்ள தொற்றுக்கள் மூலமாக ஆட்டிஸம் பாதிப்பு ஏற்படுகிறது.

## ஆட்டிஸம் பாதிப்புடைய குழந்தையை நாம் எவ்வாறு கண்டறியலாம்?

- குறிப்பிட்ட பொருட்களை உற்றுநோக்கி பார்த்துக் கொண்டிருத்தல்.
- தனிமையில் உட்கார்ந்திருத்தல் (பிற குழந்தையுடன் சேராமல் தனியாக இருத்தல்)
- கண்களுக்கு முன்னால் விரல்களை அல்லது பொருட்களை அசைத்தல்.
- கைகளை அசைத்தல்.
- தேவையற்ற ஒலிகளை ஏற்படுத்துதல்.
- உடலின் மேல் பொருட்களை வைத்து தேய்த்துக் கொள்ளுதல்.
- உடலை முன்னும் பின்னும் மற்றும் பக்கவாட்டில் அசைத்தல்.
- தேவையற்ற பொருட்களை வாயில் வைத்தல்.
- பொருட்களை நுகர்ந்து பார்த்தல்
- அடிக்கடி வார்த்தைகளை திரும்பத் திரும்ப சொல்லுதல்.
- தினமும் ஒரே மாதிரியான செயல்களையே எதிர்பார்த்தல் / செயல்படுதல்
- மொழி பரிமாற்றம் குறைபாடு
- ஒரே பொருட்களுடன் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருத்தல்.
- பொருட்களை சுழற்றி விளையாடுதல்
- முகத்தையும் / கண்களையும் பார்த்து பேசுவதின்மை / குறைவு
- குறைவான கவனம் செலுத்தும் திறன்
- சத்தத்திற்கு அதிகமாக உணர்ச்சிவசப்படுதல்.

## ஆட்டிஸம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏதேனும் செய்ய இயலுமா? அவை என்ன?

மறுவாழ்வுத்துறை நிபுணர்கள் அடங்கிய குழு (உ-ம்) மருத்துவ உளவியாளர் (Clinical Psychologist) மன நல மருத்துவர் (Psychiatrist) தொழில்வழி சிகிச்சையாளர் (Occupational Therapist), பேச்சு மொழி சிகிச்சையாளர் (Speech Therapist) மற்றும் சிறப்புக் கல்வியாளர் (Special Educators) மூலமாக கண்டறியும் சோதனைகள் மற்றும் பயிற்சி முன் ஆய்வின் மூலம் ஆட்டிஸம் உள்ளதா என கண்டறியலாம்.

## ஆட்டிஸம் பாதிக்கப்பட்டவர்கள் முன்னேற முடியுமா?

ஆம், சரியான பயிற்சி முறையினாலும், பன்முறை சிகிச்சை பயிற்சிமுறைமூலமாகவும் ஆட்டிஸம் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையை மேம்பாடு செய்ய முடியும்.

## பன்முறை பயிற்சி என்றால் என்ன?

பன்முறை பயிற்சி என்பது பல்வகைப்பட்ட பயிற்சி நிபுணர்கள் மூலம் செயல்படுத்தப்படும் பயிற்சி முறையாகும்.

## மற்ற பயிற்சி முறைகள் எவை எவை?

- உணர்வுகள் ஒருங்கிணைப்பு பயிற்சி (Sensory Integration Therapy)
- கேட்டல் திறன் ஒருங்கிணைப்பு (Auditory Integration)
- கட்டமைப்பான கல்வி (Structured Education)
- நடத்தை சீரமைப்பு (Behaviour Modification)

## ஆட்டிஸம் பாதிப்புடைய குழந்தைகளுக்கு NIEPMDல் உள்ள சேவைகள் :

- தகுதி வாய்ந்த நிபுணர்கள் CARS, CHAT, DBC, GARS போன்ற வரையறுக்கப்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்வர்.
- உணர்வுகள் ஒருங்கிணைப்பு பயிற்சி (Sensory Integration Therapy)
- பேச்சு மொழி மற்றும் தகவல் தொடர்புத்திறன் சிகிச்சை (Speech, Language & Communication Therapy)
- சிறப்புக் கல்வி பயிற்சி (Special Education)
- நடத்தை சீரமைப்பு பயிற்சி (Behaviour Modification)
- பெற்றோருக்கான ஆலோசனை மற்றும் பயிற்சி (Parental Counselling)
- தொழில் கல்விப் பயிற்சி (Vocational Training)

## பெற்றோர் கவனத்திற்கு

தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் நடத்தையை கண்டும் காணாமல் விடக்கூடாது.